2002 அக்டோபர் 29]

பெண்கள் ஆண்களைப் போல் கல்வியிலே உயரவேண்டுமென்று திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றார்கள். ஆகையால், அந்த வகையிலே பெண்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திய, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் அரசுக்குத் தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 52, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

52—

நீதிமன்றக் கட்டடம்

*****13142—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது.

(ஆ) மைய அரசிடமிருந்து கோரப்பட்ட நிதி பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவிற்கு அமைச்சர் அவர்கள், அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள்.

[2002 அக்டோபர் 29

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பே காங்கேயத்தில் உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையும் கிடைக்கப்பெற்றதாகத் தகவல் கிடைத்தது. ஆனால், தொடர்ந்து 1½ ஆண்டு காலதாமதம் ஆகியிருக்கிறது. அது விரைவில் அமைக்கப்படுமா? அந்தக் கட்டடத்தினுடைய மதிப்பு என்ன? நீதிபதிகளுக்கு அங்கே குடியிருப்புகள் அமைக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், வெள்ளக்கோவில், காங்கேயம் போன்ற பகுதிகளிலிருந்து சார்பு நீதிமன்றங்களுக்கு, தாராபுரம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டடம் அமையும்போது இந்த வளாகத்திலேயே, வாரத்தில் ஒரு நாளோ, இரண்டு நாளோ camp court—சார்பு நீதிமன்றமும்—அமைக்க அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் அமைக்கப்படவுள்ள கட்டடத்தினுடைய உத்தேச மதிப்பு ரூ. 1 கோடியே 78 இலட்சம். Constitution of Court and Construction of Court; ஒரு கோர்ட்டை நிர்மாணிக்க வேண்டுமென்றாலும்கூட, கோர்ட் கட்டடம் கட்ட வேண்டுமென்றாலும்கூட, மத்திய அரசினுடைய 50% நிதியுதவியுடன்தான் செய்யப்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பழைய கட்டடங்கள் எல்லாம் இடிக்கப்பட்டு, நல்ல நிலையிலே நீதிமன்றங்கள் இயங்கவேண்டுமென்கின்ற வகையிலே ஒரு கருத்துரு 140 கோடி ரூபாய்க்கு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, 7-5-2002 மற்றும் 11-7-2002 அன்று கடிதம் எழுதியும்கூட, இதுநாள் வரை மத்திய அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10-30

அதேபோன்று நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டித்தர 1993-94 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, அதாவது 31-12-2001 வரை நம்முடைய அரசு 116 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை கிட்டத்தட்ட 7, 8 வருடங்களில் நம்முடைய அரசு மொத்தம் 76 கோடி ரூபாய்

2002 அக்டோபர் 29]

செலவு செய்துள்ளது. மத்திய அரசு ஆனால் இதுவரை 31 கோடி ரூபாயை மட்டும் release விடுவித்திருக்கிறது. எனவே, இன்னும் பழைய 1993-94-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணமே நமக்கு வந்து சேராத நிலைமை இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வது; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சேர்ந்த கூட்டணி அரசாக மைய அரசு இருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய மண்ணின் மைந்தர்கள் அங்கே அமைச்சர்களாக இருக்கின்றார்கள். அவர்களை அங்கே வலியுறுத்தச் சொல்லி, நிதியைப் பெற்றுத் தந்தால் அந்தக் கருத்துரு இந்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 53, திரு. க.ரா. கந்தசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

53—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***19107—திரு. க.ரா. கந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலத்தில் அருள்மிகு பன்னாரி மாரியம்மன் கோயில் சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பன்னாரி, அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் சார்பில் கலைக் கல்லூரி கட்டுவதற்கோ, நடத்துவதற்கோ தற்சமயம் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.